விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 270 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 29 வெள்ளிக்கிழமை (15.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### ரணில் அரசை வீழ்த்துவதற்காக

# நாட்டை ஒருபோதும் காட்டிக் கொடுக்கோம்

## உதய கம்மன்பில எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

**ரணில் அரசை வீழ்த்துவதற்கு நடவடிக்கை எடுப்போம். ஆனால் சர்வதேசத்திடம் நாட்டையும் இராணுவத்தையும் காட்டிக் கொடுக்க மாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சி என்ற ரீதியில் அரசாங்கத்தையும் ராஜபக்ஷர்களையும் கடுமையாக எதிர்ப்போம்.

15

## ஐ.எம்.எப் பிரதிநிதிகளுடன் மீளாய்வுக்கூட்டம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதலாவது மீளாய்வுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த

15

## 65,871 ஏக்கர் பயிர்கள் நாசமானது

(கொழும்பு)

வறட்சி, மழை மற்றும் புழுக்கள் போன்றவற்றின் தாக்கத்தினால், 65 ஆயிரத்து 871 ஏக்கர் பயிர்கள் நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில்

15

## அரசின் அடக்குமுறை வரிக்கொள்கைக்கு எதிராக

### யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் போராட்டம்




15

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி இதுவரை 14 உடற்பாகங்கள் மீட்பு

### நேற்றும் 5 எச்சங்கள் கண்டெடுப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நேற்று எட்டாவது நாளாக மேற்கொள்ளப்பட்டது.

நேற்று 5 உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை 14 உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

நேற்று மீட்கப்பட்ட

15

## அரசு தேர்தலை நடத்தாது மக்கள் உரிமையை பறிக்கின்றது

### பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் சஜித்



(கொழும்பு)

அரசு தேர்தலை நடத்தாது மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிக்கின்றது என பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எடுத்துரைத்துள்ளார்.

பிரித்தானிய புதிய உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பெட்ரிக் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

15

## காளை மாடு முட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

### நல்லூர் ஆலய பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலயத்தின் நந்தவனப் பகுதியில் பணியாற்றுமொருவர் காளை மாடு முட்டி உயிரிழந்துள்ளார்.

இதில் இருபாலையைச் சேர்ந்த நித்தியசிங்கம் (வயது-60) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை மாலை

15

### ‘திலீபன் வழியில் வருகிறோம்’

## தியாக தீபத்தின் ஊர்திப் பவனி பொத்துவிலில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பன்னிரண்டு தினங்கள் அகிம்சை வழியில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் தினத்தை முன்னிட்டுத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் "திலீபன் வழியில் வருகிறோம்" எனும் தொனிப் பொருளிலான தியாகதீபம் திலீபனின் நினைவு சுமந்த அவரது உருவப்படத்தைத் தாங்கிய ஊர்திப் பவனியானது இன்று வெள்ளிக்கிழமை காலை

15

### லிபியாவில் புயலால் ஏற்பட்ட வெள்ளம்

## 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம்



(ரிப்போலி)

லிபியாவில்புயல்தாக்கத்தை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தால் 20,000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என டெர்னா நகர மேயர் தெரிவித்துள்ளார்.


இதுவரை 6000 பேர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

டேனியல் புயலால் கடந்த சில நாட்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



கிளி/பளை மத்திய கல்லூரியின்
பிரதி அதிபர் திரு. **க.றுகுணன்** அவர்களின்
பாசமிகு மாமனாரான

## அமரர் நடராசா தியாகராசா

அவர்கள் 09.09.2023 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம் (17083)
கிளி/பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)

# நீதிபதி இளஞ்செழியனின் தாயார் காலமானார்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் அவர்களின் தாயார் திருமதி சிவபாக்கியம் மாணிக்கவாசகர் நேற்று கொழும்பில் காலமானார்.

அவருக்கு வயது 86 வேலணை மகா வித்தியாலயத்தின் ஆசிரியராக, அதிபராகக் கடைமையாற்றி ஓய்வு பெற்ற இவர் வேலணையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் மாணிக்கவாசகரின் மனைவியாவார். (ம)


# கொழும்பு விலையில்

## யாழ்ப்பாணத்தில் கோழி மலிவு விற்பனை


(17084)

- ❖ 1 Kg சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி விலை 1250/-
- ❖ 1 Kg பேரன்ஸ் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1250/-
- ❖ கல்பேட் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1 Kg 1250/-
- ❖ விறாத்து கோழிக்குஞ்சுகள், சேவல், ஊர்கோழி

இவை அனைத்தும் வியாபாரிகளுக்கு, ஹோட்டல் தேவைப்படுபவர்களுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.

தொடர்பு : நியு சிற்றி பாம்
நியு சிற்றி கோழிக்கடை
இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர், யாழ்ப்பாணம்.


# திருமலையில் இந்திய போர்க்கப்பல்



(திருகோணமலை)

இந்திய கடற்படைக்கு சொந்தமான 'INS Nireekshak' போர்க்கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளது.

நேற்று காலை வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படையினர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர்.

Diving Support Vessel வகையான இந்திய போர்க்கப்பல், 70.5 மீற்றர் நீளமுடையது.

கப்பலில் 137 கடற்படை ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

குறித்த கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் கடற்படையின் சுழியோடிகள் பிரிவுடன் பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

'INS Nireekshak' போர்க்கப்பல் எதிர்வரும் 21 ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது. (ம-7)


## Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7260)

**021 222 1265, 076 250 0098**


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் விஜயரட்ணம் புஸ்பலீலா (கலா)

ஊர் எல்லாம் உன் உறவு
உன் அருகில் யாரும் இல்லை இறுதியிலே
கொண்டவளே கொடியதடி கொரோனா
மறப்பேனோ அந்நாளை

நாற்புறமும் நாம் பெற்ற நால்வரடி
நாதியற்றவனாய் நானும் அங்கேயடி
கொண்டவளே கொடியதடி கொரோனா
மறப்பேனோ அந்நாளை

தனி ஒருத்தி என்று அழுது சாய்ந்திடுவாள்
என் தோலில்
தாங்கியதடி என் தோள்க்ள்
தாய் தந்தைக் கொப்பாக
தனி ஒருத்தி இல்லையடி நீ
தழைத்ததடி நம் குடும்பம்
நான்கு ஊரிலும்
நற் பேரப்பிள்ளைகளாய்

ஓய்வெடடி நீ அங்கே
ஒப்பற்ற தாய் தந்தையுடன்
ஓடோடி வந்திடுவேன்
ஓர் நாளில் உன்னிடமே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"புஸ்ப நிவாஸ்"
அண்ணாசிலையடி, 076 745 6374


(C-7259)

கணவன்
ந.விஜயரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தனின் தீர்த்தத் திருவிழா







நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ தீர்த்தத்திருவிழா நேற்று காலை பக்தி பூர்வமாக நடைபெற்றது. வசந்த மண்டப பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வேல் பெருமான், வள்ளி, தெய்வானை, பிள்ளையார் மற்றும் சண்டேஸ்வரர் ஆகியோர் ஆலய தீர்த்தக் கேணிக்கு எழுந்தருளியதை தொடர்ந்து தீர்த்த உற்சவம் இடம்பெற்றது.

(படங்கள் - சிவசாந்தன)

## இந்திய உயர்ஸ்தானிகர் நியமனம்

(கொழும்பு)

பெல்ஜியத்திற்கான இந்தியத் தூதராக பணியாற்றும் சந்தோஷ்ஜோவை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக, இந்தியா நியமித்துள்ளது.

அவர், விரைவில் தமது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக பதவி வகித்து வரும் கோபால்பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

## மூன்று ஆண்டுகளுக்குள் 'அஸ்வெசும' நிறுத்தப்படும்

### அமைச்சர் அதிர்ச்சித் தகவல்


**(கொழும்பு)**

**மூன்று ஆண்டுகளுக்குள் அஸ்வெசும நிவாரணம் நிறுத்தப்படும் என்று பெண்கள் குழந்தைகள் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் துறையின் செயல் அமைச்சர் அனுபா பாஸ்குவேல் தெரிவித்தார்.**

அஸ்வெசும நிவாரணம் மக்களை பலப்படுத்துவதற்கு ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன்படி, சமுர்த்தி பிளஸ் திட்டத்தின் கீழ், அந்த மக்கள் பல்வேறு தொழில்களில் பணியாற்ற உள்ளனர். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களிடம் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என அவர் தெரிவித்தார். (நி)

## உயர்தரப் பரீட்சைக்கான நேரஅட்டவணை



(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணையை பரீட்சை திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டுக்கான பரீட்சை நவம்பர் 27 இல் தொடங்கி டிசெம்பர் 21 ஆம் திகதி முடிவடையும். (நி)



## விடுதலைப்புலிகளால் விளையாட்டுத்துறைக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படவில்லை

### முதன்முறையாக மனம் திறந்தார் முரளிதரன்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் விளையாட்டுத்துறைக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் **தெரிவித்ததாவது,**

தமிழீழ விடுதலைப்புலிகள் துடுப்பாட்டம் உள்ளிட்ட விளையாட்டுகளுக்கு ஒரு போதும் தடை விதிக்கவில்லை என்பதுடன் விளையாட்டுத் துறைசார் செயற்பாடுகளுக்கு அவர்கள் எந்தவிதமான பாதிப்புக்களையும் செய்யவில்லை.

அவர்களின் குறிக்கோள் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல்துறை என்பனவே. இந்த நிலையில் அவர்கள் சாதாரண மக்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

3 சந்தர்ப்பங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளை சந்தித்திருந்தேன்.

அதாவது கடந்த 2002 ஆம் ஆண்டு ஐ.நாவின் உணவு தூதராக இலங்கையில் பணியாற்ற எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

குறித்த சந்தர்ப்பத்தில் நான் அனைத்து பகுதிகளுக்கும் விஜயம் செய்து ஐ.நாவால் இலவசமாக வழங்கப்படும் உணவுப் பொருட்கள் ஒழுங்கான முறையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றதா? மக்களுக்கு ஒழுங்கான முறையில் கொண்டு சேர்க்கப்படுகிறதா என கண்காணித்தேன்.

இதன்போது, விடுதலைப் புலிகளின் தலைமையகத்திற்கும் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தேன். அதன்போது விடுதலைப்புலிகள் எனக்கு மதிய உணவை வழங்கினார்கள்.

மேலும், தனியார் நிறுவனமொன்றினால் கிரிக்கெட்டை ஊக்குவிப்பதற்காக புலிகளின் இடங்களுக்கு சென்று கிரிக்கெட்டும் விளையாடியுள்ளேன்.

அதேவேளை, சுனாமி அனர்த்தத்தின் போதும் புலிகளின் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்து மக்களுக்குத் தேவையான உணவு வழங்கல் செயற்பாட்டையும் முன்னெடுத்ததுடன் மக்களுடன் நேரடியாக கதைத்து பாதிப்புக்கள் தொடர்பிலும் கேட்டறிந்தேன் எனவும் முத்தையா முரளிதரன் பதிலளித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணமட்ட பளுதூக்கல் போட்டியில் இராமநாதன் கல்லூரி ஆதிக்கம்



மாகாணமட்ட பளுதூக்கல் போட்டிகள் கடந்த மாதம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் யா/இராமநாதன் கல்லூரிக்கு 1 தங்கப்பதக்கம், 3 வெள்ளிப்பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் என்பன கிடைத்துள்ளன.

அந்த வகையில் 17 வயதுக்குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் 45 கிலோ பிரிவில் 67 கிலோ பளுவை தூக்கி க.பிரணதி 2 ஆம் இடத்தினையும் 49 கிலோ பிரிவில் 58 கிலோ பளுவை தூக்கி இ.மயூரணி 3 ஆம் இடத்தினையும் 55 கிலோ பிரிவில் 67 கிலோ பளுவை தூக்கி ஞா.சங்கவி 2 ஆம் இடத்தினையும் 59 கிலோ பிரிவில் 57 கிலோ பளுவை தூக்கி ந.வைஷ்ணவி 3 ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

அதுபோல 20 வயதுக் குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் 71 கிலோ பிரிவில் 90 கிலோ பளுவை தூக்கி நீ.மஸ்மிதா 2 ஆம் இடத்தினையும் 81 கிலோ பிரிவில் 55 கிலோ பளுவை தூக்கி சு.அபிநயா 1 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளதோடு இவர்களுக்கான பயிற்சிகளை பயிற்றுவிப்பாளர் ஸ்ரீஸ்கந்தராசா டிலானி மற்றும் உடற்கல்வி ஆசிரியர் நடராசா செந்தூரன் ஆகியோர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (6)

## கோலூன்றிப் பாய்தல் போட்டி

# இரு பதக்கங்களை தனதாக்கிய விக்டோரியா கல்லூரி மாணவிகள்



91 ஆவது சேர்ஜோன் ராபட் மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கொழும்பு சுகதாச மைதானத்தில் நடைபெற்றது.

கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 16 வயது பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியை சேர்ந்த மாணவிகளான ஜெ.ரூபிகா 2 ஆம் இடத்தினை பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பூ. தர்ஷிகா 3 ஆம் இடத்தினை பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-105)

# பிரான்ஸை வீழ்த்திய ஜேர்மனி

சர்வதேச நட்புமுறை கால்பந்து போட்டியில் ஜேர்மனி அணி 2-1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸை வீழ்த்தியது.

ஜேர்மனியின் சிக்னல் இடுனா பார்க் மைதானத்தில் நடந்த போட்டியில் ஜேர்மனியின் மற்றும் பிரான்ஸ் அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கிய 4 ஆவது நிமிடத்திலேயே ஜேர்மனியின் தாமஸ் முல்லர் அபாரமாக கோல் அடித்தார்.

அதனைத் தொடர்ந்து 87 ஆவது நிமிடத்தில் மற்றொரு ஜேர்மனி வீரர் லெரோய் சானே மிரட்டலாக கோல் அடித்தார்.

89 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணிக்கு பெனால்டி அணி வாய்ப்பு கிடைத்தது. அதனை சரியாக பயன்படுத்திக் கொண்ட கப்டன் கிரீஸ்மன் கோலாக மாற்றினார்.

ஆனால் அதற்கு மேல் பிரான்ஸ் அணியை கோல் அடிக்க ஜேர்மனி விடவில்லை. இதனால் 2-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் பிரான்ஸ் அணி தனது வலுவான வீரரான கைலியன் எம் பாப்பேயை களமிறக்கவில்லை.

எனினும், அவர் போட்டியை தனது அறையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார். இதனால் அவரது ரசிகர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. (6)




# பொதுமக்கள் பார்வைக்காக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட உலகக் கிண்ணம்

ஐ.சி.சி ஆடவர் கிரிக்கெட் உலகக் கிண்ணம் இலங்கையில் இரண்டு தினங்களுக்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரதான வர்த்தக நிலையங்களில் ஒன்றான உலக வர்த்தக நிலையத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு காட்சிக்கு வைக்கப்பட்ட உலகக் கிண்ணத்தை பிற்பகல் 2 மணிவரை பொதுமக்கள் பார்வையிட்டதன் பின்னர் வன் கோல் பேஸ் கட்டடத் தொகுதியில் பிற்பகல் 3




மணிமுதல் இரவு 8 மணிவரை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

இன்று வெள்ளிக்கிழமை இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்கவின் பிரசன்னத்துடன் உலகக் கிண்ணம், ஊடகவியலாளர்களுக்கு காட்சிப்படுத்தப்படும்.

20 நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட உலகக் கிண்ணம் இங்கிருந்து உலகக்கிண்ணப் போட்டி நடைபெறவுள்ள இந்தியாவுக்கு கொண்டு செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# 3 ஆவது ஒருநாள் போட்டியில் ஆஸியை வென்றது தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது.

முதல் இரு போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்தது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

டாஸ் வென்ற அவுஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய தென்னாபிரிக்கா ஆரம்பம் முதலே ரன்களை குவித்தது.

இதனால் அந்த அணி 50 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 338 ரன்கள் குவித்தது. மார்கரம் அதிரடியாக ஆடி சதமடித்து அசத்தினார்.

மார்க்ரம் 102 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். டி காக் 82 ரன்னும் பவுமா 57 ரன்னும் எடுத்தனர். இதையடுத்து, 339 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் டேவிட் வார்னர் மட்டும் அரை சதமடித்து 78 ரன்னில் அவுட்டானார். டிராவிஸ் ஹெட் 38 ரன்னும் மிட்செல் மார்ஷ் 29 ரன்னும் எடுத்தனர். இறுதியில் அவுஸ்திரேலிய அணி 34.3 ஓவரில் 227 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 111 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி முன்னிலை வகிக்கிறது. தென்னாபிரிக்க சார்பில் ஜெரால்டு கொயட்சி 4 விக்கெட்டும் சம்ஷி, மகராஜ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர். ஆட்ட நாயகன் விருது மார்க்ரமுக்கு வழங்கப்பட்டது. (6)

# பென்ஸ்டோக்ஸ் ருத்தர தாண்டவம் இங்கிலாந்து அபார வெற்றி

இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிவரும் நியூசிலாந்து அணி 4 இருபது-20 மற்றும் 4 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று வருகிறது. முதலில் நடந்த இருபது-20 தொடர் 2-2 என சமனிலை ஆனது.

அடுத்து நடந்த முதல் ஒருநாள் போட்டியில் நியூசிலாந்தும், 2 ஆவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்தும் வெற்றி பெற்றன. இந்நிலையில், இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி லண்டனில் நேற்று நடந்தது.

டாஸ் வென்ற நியூசிலாந்து பவுலிங்கை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 48.1 ஓவரில் 368 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. பென் ஸ்டோக்ஸ் அதிரடியாக ஆடி 124 பந்தில் 182 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். டேவிட் மலான் 96 ரன்னில் அவுட்டானார். ஜோஸ் பட்லர் 38 ரன்கள் எடுத்தார். நியூசிலாந்து சார்பில் போல்ட் 5 விக்கெட்டும், பென் லிஸ்டர் 3 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 369 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் நியூசிலாந்து களமிறங்கியது.

நியூசிலாந்து 39 ஓவரில் 187 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. இதன்மூலம் 181 ரன்னில் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் ஒரு நாள் தொடரில் 2-1 என இங்கிலாந்து முன்னிலை பெற்றது. பென்ஸ்டோக்சுக்கு ஆட்ட நாயகன் விருது அளிக்கப்பட்டது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்காக இணையும் ரணில்-மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை அடுத்த தேர்தலுக்கு முன்னதாக ஒரு மாபெரும் கூட்டணியை அமைக்க வாய்ப்புள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த கூட்டணி தொடர்பிலான ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்த பேச்சுக்கள் நாட்டை ஆள்வதற்கான பொதுவான கொள்கை மற்றும் கட்டமைப்பிற்கு உடன்பட முயற்சிப்பதும் உள்ளடங்குவதாகவும் கூறப்படுகிறது. இந்த நடவடிக்கைக்கு பெரும்பான்மை ஒருமித்த கருத்து உள்ளதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும், அடுத்த தேர்தலில் இரு தரப்பினரும் வெற்றிபெற ஒரே வழி கூட்டணியில் இணைந்து செயற்படுவதுதான் என்பதில் இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர்.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பசில் ராஜபக்ஷவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அண்மையில் ஒரு பேச்சு வார்த்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில்அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

**கணபதிப்பிள்ளை நடராசா**

(இளைப்பாறிய இ.போ.ச பரிசோதகர்)

திதி:- பிரதமை 15.09.2023



மலர்வு 19.02.1939 — உதிர்வு 06.09.2013

நித்தமும் நினைவுடன் நாம் வாழ
அத்தனை நலன்களும் எமக்காக்கி
பத்திரமாய் எம்மை வளர்த்தவரே
பத்தாண்டு ஆனதென்ன விரைவினிலே

(C-7259)

இல. 503, இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## இராசிபலன்

15.09.2023
ஆவணி 29, வெள்ளிக்கிழமை
அமாவாசை காலை 7.43 மணிவரை

பூரம் காலை 6.22 மணிவரை
சுபநேரம் -6.03-7.33 மணிவரை
இராகுகாலம்-10.33-12.03 மணிவரை

சந்திராஷ்டமம்-சதயம்.

வளவன்




மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும்.




தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.




வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள்.




பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.




வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.




பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




உற்றார் உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்ப ஒற்றுமை கூடும்.




வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், நட்பு வட்டம் விரிவடையும், காரிய அனுகூலமுண்டு.

உழைப்பவர்களுக்கு வெகுமதி விதைப்பவனுக்கு அறுவடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலையை அகற்றுமாறு உடுப்பிட்டியில் போராட்டம்!




(கரணவாய்)

யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி சந்தியில் புதிதாக திறக்கப்பட வுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்கள் நேற்று வியாழக் கிழமை காலை உடுப்பிட்டிச் சந்தியில் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

மதுபானசாலை அமைந் துள்ள பகுதியில் பாடசாலை கள், தனியார் கல்வி நிலைய ங்கள், ஆலயங்கள் போன்றன அமைந்திருப்பதால் குறித்த மதுபானசாலை அகற்றப்பட வேண்டும் எனப் போராட்டத் தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு சில தினங்களுக் குள் மதுபானசாலை அகற் றப்படாவிட்டால் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்க வுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் போராட்டம் தொட ர்பான மகஜர் வடக்கு மாகாண ஆளுநர், அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்களுக்கு வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-4-60-33)



விவாத மேடை -2023 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்டப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியை எதிர் கொண்டு மகாஜனக் கல்லூரி இரண்டாமிடத்தைத் தன தாக்கியது. (படம்:ஈ.ச்சமோட்டை செய்தியாளர்)

## இளவாலை பாடசாலையில் புலமைப்பரிசில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால், ஆண்டு தோறும், சங்கத்தின் "அரும்பு" கல்விச் செயற்திட்டத்தின்கீழ், நடத்தப்படுகின்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தர ங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை இளவாலை றோ.க.த பாட சாலையில் இடம்பெறவுள்ளது.

யாழின் பிரபல புலமை ஆசிரியர் "குட்டிச்சுட்டி" வதன் வளவாளராக கலந்துகொள் ளும் இலவச வழிகாட்டல் கருத் தரங்கிற்கு, விரும்பிய எந்த மாண வரும் முற்பதிவின்றி கலந்து கொள்ள முடியும்.

எனவே பரீட்சைக்குத் தோற் றும் அனைத்து மாணவர்க ளையும் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர் கள் அழைப்பு விடுத்துள்ள னர். (நி-4)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை கோட்டன் கட்டு ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன் னிட்டு இன்று கிரியை ஆர ம்பமும் நாளை சனிக் கிழமை எண்ணெய்க்காப் பும் இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதிஷ்டா குருவாக ஊரெழு சிவஸ்ரீ வா.வித்தியாதரக்குருக்கள் கலந்துகொள்வார். (நி-4)

## காலபோகக் கூட்டமும் உரமானியப் பதிவும்

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட விவ சாயிகளுக்கான 2023/2024 ஆம் ஆண்டிற்கான காலபோக கூட்டமும் உரமானியப் பதிவும் கமக்கார அமைப்பு ரீதியாக இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் இன்று வெள்ளிக்கிழமை கைதடி தெற்கு, தென்கிழக்கு கமக்கார அமைப் பினருக்கான பதிவுகள் சைவ ஐக்கிய சங்க வாசிகசாலை யிலும், நாவற்குழி கிழக்கு விவசாயிகளுக்கான பதிவுகள் கிராமத்தின் பொதுநோக்கு மண்டபத்திலும், எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை தென் மட்டுவில் விவசாயிக ளுக்கான பதிவுகள் கதிரொளி சனசமூக நிலையத்திலும், 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சந்திரபுரம் விவசாயிகளுக்கு கிராமத்தின் பொதுநோக்கு மண்டபத்திலும், 20 ஆம் திகதி புதன்கிழமை நாவற்குழி மேற்கு விவசாயிகளுக்கு கிராமத்தின் பொதுநோக்கு மண்டபத்திலும், 21 மற்றும் 22 ஆகிய இரு தினங்கள் தனங்கிளப்பு விவசாயிகளுக்கு கிராமத்தின் பொது நோக்கு மண்டபத்திலும், 25 ஆம் திகதி கைதடி நாவற்குழி விவசா யிகளுக்கு சிறிமுருகன் சன சமூக நிலையத்திலும், கோவி லாக்கண்டி விவசாயிகளுக்கு பொதுநோக்கு மண்டபத் திலும், 26 ஆம் திகதி மட்டுவில் நுணாவில் மற்றும் மட்டுவில் மத்தி விவசாயிகளுக்கு வளர் மதி வாசிகசாலையிலும், 27 ஆம் திகதி மற்றும் ஒக்டேபர் 2 ஆம் திகதி ஆகிய தினங்களில் மறவன்புலோ விவசாயிகளு க்கு கிராமத்தின் பொதுநோக்கு மண்டபத்திலும் பதிவுகள் இடம் பெற இருப்பதாக கைதடி கமநல சேவை நிலையத்தினர் அறியத் தந்துள்ளனர். பதிவுகள் அனை த்துமே காலை 9மணி தொடக் கம் பிற்பகல் 2மணி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-4-30)

## தென்னையைத் தாக்கும் நோய்கள் கிளிநொச்சியில் விழிப்புணர்வு

(தருமபுரம்)

தென்னையில் ஏற்பட்டுவரும் செவ்வண்டு, கருவண்டு தாக் கம் தொடர்பில் மக்களுக்கு விழி ப்புணர்வூட்டும் கலந்துரையாடல் வடமாகாண தென்னை அபி விருத்திச் சபையின் முகாமையா ளர் வைகுந்தன் தலைமையில் கிளிநொச்சி-பிரமந்தனாறு மயில் வாகனபுரம் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றது.


இதன்போது நாட்டில் ஏற் பட்டுள்ள கடும் வறட்சி கார ணமாக செவ்வண்டு, கரு வண்டு தாக்கம் அதிகரித்துள் ளதுடன் வெண்புள்ளி, மைட்ஸ், தண்டுசாறுருஞ்சி என பல் வேறு வகையான நோய்த் தாக்கம் ஏற்பட்டு தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள் ளது என சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கான சிகிச்சையை தென்னை உற்பத்தியாளர்கள் எவ்வாறு மேற்கொள்ள வேண் டும், எவ்வகையான மருந்து களைப் பயன்படுத்த வேண்டும் என மக்களுக்குத் தெளிவூட்டப் பட்டது. (நி-4-316)

## மணல் ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் 24 ஆம் திகதி அன்று காலை 9 மணிக்கு மணல் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள் ளது. (நி-4)



நல்லூர்க்கந்தன் ஆலய தேர்த்திருவிழாவுக்கு பக்தர் ஒருவர் நேற்று முன்தினம் வளைய வடிவமான தூக்குக் காவடி ஒன்றை எடுத்துச் செல்லும் காட்சி வைரலாகி வருகிறது.

# குருந்தூர்மலை விவகாரம் தமிழ் எம்.பிக்கள் கைது!

## பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

குருந்தூர்மலை விவ காரம் தொடர்பில் பாராளு மன்ற உறுப்பினர்களான எஸ்.வினோ நோகராத லிங்கம், செல்வராசா கஜேந் திரன் ஆகியோர் நேற்றுக் கைது செய்யப்பட்டு பிணை யில் விடுவிக்கப்பட்டுள்ள னர்.

குருந்தூர்மலை விகா ரையில் பூசை வழிபாடுக ளுக்காக சென்ற பௌத்த குருமாரின் வழிபாட்டுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அவமானப்படுத்திய குற்றச்சாட்டுக்களை முன் வைத்து பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்கு எதிராக பௌத்த பிக்குவால் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு தொடர்பில் குறி த்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் நேற்று கைதுசெய்யப்பட்டு முல்லை த்தீவு நீதிமன்றில் முற்படுத் தப்பட்ட நிலையில் அவர்க ளைப் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவு பிறப் பித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையில் நீதி மன்ற கட்டளையையும் மீறி பௌத்த விகாரை நிர்மா ணிக்கப்பட்டிருந்த நிலை யில், பூசை வழிபாடுகளுக் காக சென்ற பௌத்த குரு மாரின் வழிபாட்டுக்கு இடை யூறு விளைவித்தமை மற் றும் அவமானப்படுத்திய குற்றச்சாட்டுக்களை முன் வைத்து சில பிக்குகள் முல் லைத்தீவு பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்தி ருந்தனர்.

அந்த முறைப்பாட்டுக் கமைவாக முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள்-கஜிந்தன்,சிவசாந்தன்)

# இழுவைமடித் தொழிலை நிறுத்தக்கோரி மகஜர் கையளிப்பு

(அராலி)

இழுவை மடித் தொழிலை நிறுத்தக்கோரி யாழ்ப்பாண கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் சமாசங்கள் ஆகியன நேற்று ஒன்றிணைந்து பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பியுள்ளதுடன் குறித்த மகஜரினை யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில், துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெய பாஸ்கரனிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இலங்கையின் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களிற்கும் இந்திய மீனவர்களிற்கும் இடையிலே இழுவைப் படகினால் கடல் வளமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதான பிரச்சினை நீண்ட காலமாக தொடர்ந்த வண்ணமே உள்ளது.

தற்போது இருநாட்டு தொப்புள் கொடி உறவுக்கு தடையாக இருக்கும் இழுவைமடித் தொழிலை இலங்கை கடற்பரப்பிற்குள் நிறுத்தி இருநாட்டு தமிழ் மீனவர்களும் ஒற்றுமையுடனும், சகோதரத்துடனும் வாழ்வாதாரத்தை நடத்த ஆவண செய்ய வேண்டும் என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-104)

# ஓய்வு பெற்ற மருத்துவர்களை கடமைக்கு அழைப்பதில் அரசு கவனம்

## சுகாதார அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

ஓய்வு பெற்ற மருத்துவர்களை திரும்ப கடமைக்கு அழைப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இது தொடர்பான பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதன்படி தற்போது நிலவும் வைத்தியர் பற்றாக்குறைக்கு தீர்வாக ஓய்வுபெற்ற வைத்தியர்களை மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# இலங்கையில் இந்திய முதலீட்டை ஊக்குவிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இந்திய முதலீட்டை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமென இலங்கை இந்திய சங்கத்தின் உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளனர்.

இலங்கை இந்திய சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இச்சந்திப்பில் வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட இரு தரப்பு பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவதற்கான வழிகள் மற்றும் மூலோபாயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:பூராடம். சூரி. செவ்
கி.பா: 281/2
உயரம்: -170cm
தகைமை/தொழில்: BSc (Mechanical Engineering)
எதிர்பார்ப்பு: Mechanical Engineering (Singapoor), Engineer, Doctor, BSc பட்டதாரி
தொ.இ: B/13902

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம்: 5'3
தகைமை/தொழில்: சொந்த வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13903

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம் : ரோகினி 11 இல் சூரி. செவ்
கி.பா: 261/2
உயரம்: 163 cm
தகைமை/தொழில்: High School Diploma
எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம் (கனடா), நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/13908

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம் : உத்தராடம் 11இல் சூரி. செவ்
கி.பா: 6
தகைமை/ தொழில்: A/l பாதுகாவலர் (அரச வங்கி)
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்.
தொ.இ: B/13918

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 41/2
உயரம்: -5'7
தகைமை/தொழில்: MBBS Final Year
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ:G/13904

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSc in Yoga Hypnotherapist
எதிர்பார்ப்பு: வெளிநாடு/அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/13905

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 6
தகைமை/தொழில்: BSc (Agriculture) AI
எதிர்பார்ப்பு: பட்டதாரி/அரச உத்தியோகத்தர்
தொ.இ:G/13906

பிறப்பு: 1992இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 441/2
உயரம் : 170cm
தகைமை/தொழில்: BA DO
எதிர்பார்ப்பு: அரச/ தனியார் உத்தியோகம்
தொ.இ:G/13907

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபா


# பகிடிவதை தொடர்பில் முறையிட விசேட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)


இலங்கை பல்கலைக் கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை தொடர்பில் முறையிடுவதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலங்களும் செயற்பாட்டில் இருக்குமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

076 545 3454 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு வட்ஸப் மூலம் தகவல்கள், முறைப்பாடுகள், காணொளிகள் அல்லது படங்களை அனுப்ப முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1997 எனும் துரித அழைப்பு இலக்கத்திற்கும் இது தொடர்பான தகவல்களை வழங்க முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ராஜபக்ஷக்களை எவராலும் வீழ்த்த முடியாது- பசில் இறுமாப்பு



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் அரசியல் பயணத்தை முடக்கும் வகையில் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் மீண்டும் பொய் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகருமான பசில் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அதேவேளை, இவ்வா றான நடவடிக்கை மூலம் மொட்டு கட்சியை வீழ்த்த முடி யாது எனவும் மொட்டு கட்சியோ அல்லது ராஜபக்ஷக்களோ குண்டு தாக்குதல்களை நடத்தி ஆட்சியை பிடிக்கவில்லை.

மக்கள் ஆசியுடன்தான் ஆட்சிக்கு வந்தோம். மக்கள் எமக்கு வழங்கிய ஆணை இன்னும் இழக்கப்படவில்லை. அடுத்து தேர்தலொன்று நடைபெற்றால் மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கை தெரியவரும் எனவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

முகநூல் தரிசனம் 198

## சிறுமியின் செயலால் வியப்படைந்த செல்வந்தர்

அமெரிக்காவில் மிகப்பெரிய பணக்காரரான ஒருவர் தன் தாயின் பிறந்தநாளுக்கு பரிசளிக்க ஒரு பெரிய கடையின் முன், தன் காரை நிறுத்துகிறார். பிரபலமான பூக்கடை அது. எவ்வளவு விலை சார் இது. 250 டொலர். இதைவிட் அருமையான பூ காண்பிக்க முடியுமா? வந்தவர் மிகப்பெரிய பணக்காரர் என கடைக்காரருக்கு தெரிகிறது.

இது ஆர்கிட் வகைப் பூ. மிகஅருமையா இருக்கும். ஒரு வாரம் வரை வாடாது. 500 டொலர். சரி இதையே பேக் செய்யுங்க. உங்களிடம் கொரியர் சர்வீஸ் இருக்கா?_கொரியர் சர்வீஸ் சும். செய்கிறோம் . அதற்கு ஒரு 100 டொலராகும். வேண்டாம். இந்த பூங்கொத்து இன்று என் தாயிடம் போய் சேர வேண்டும். இன்று என் தாயின் பிறந்தநாள். கொரியர் சர்வீஸ் பல காரணங்களுக்காக தாமதமாகலாம் எனக்கு இன்றே போகணும். ஒன்று செய்யுங்க. ஒரு காரும் டிரைவரும் ஏற்பாடு செய்து இந்த பூங்கொத்தை இன்றே என் தாயிடம் இந்த அட்ரஸ்சில் சேர்த்திடுங்க. ஓகே சார், இப்பவே ஏற்பாடு செய்கிறேன். இன்றே போய் சேர்ந்துவிடும்.

அதற்கும் சேர்த்து 500 டொலர் செலவாகும். பணத்தையும் அம்மாவின் வீட்டு அட்ரஸ் கொடுத்து விட்டு சென்றார் அந்த பணக்காரர். மனம் முழுக்க மகிழ்ச்சி, தனது வேலைப்பளுவான நேரத்திலும் தன் அம்மாவின் பிறந்தநாளை மறக்காமல் பூங்கொத்து அனுப்பி விடுகிறோம் என சந்தோஷத்துடன் காரில் ஏறப் போக ஒரு சின்ன சிறுமி அழுதபடி இருந்தாள்.

ஏன்பா அழுகிறாய் எனக் கேட்க, எனக்கு ஒரு டொலர் பணம் தர முடியுமா? ஒரு டொலர் தானே தாரேன். எதற்குப் பணம்? ஏன் அழுகிறாய்? ஏதாவது தொலைத்து விட்டாயா? எங்க அம்மாவின் பிறந்தநாள் மாமா இன்று. நான் வருடா வருடம் அம்மாவின் பிறந்தநாளுக்கு அம்மாவுக்கு பிடித்த ஒரு ரோஜாப் பூ வாங்கித் தருவேன். இன்று அம்மாவின் பிறந்தநாள். என்னிடம் பணம் இல்லை. நீங்க ஒரு டொலர் கொடுத்தால் ஒரு ரோஜாப் பூ வாங்கி அம்மாவிற்கு கொடுப்பேன்.

அம்மா எனக்காக பார்த்துக்கொண்டு இருப்பார். ஒரு டொலர் என்னமா 10 டொலர் தாரேன் எடுத்துக்கோ. வேண்டாம் ஒரே ஒரு டொலர் போதும். மீதி டொலரை அவரிடம் கொடுத்துவிட்டு சிட்டாக பறந்தாள் அச் சிறுமி. ஏதோ சாக்லேட் வாங்க தான் அப்படி ஒரு டொலர் கேட்கிறாளோ? என நினைத்து அந்த பணக்காரர் மெதுவாக காரை அவள் செல்லும் இடம் நோக்கிச் செலுத்த சொன்னார் டிரைவரிடம்.

ஒரு சின்ன பூக்கடையில் ஒரு டொலர் கொடுத்து ஒரு சிவப்பு ரோஜாப் பூ வாங்கி, அதை மிகுந்த சந்தோஷத்துடன் அச்சிறுமி பூ வை எடுத்தபடி ஓட, அச் சிறுமி எங்கு போகிறாள்? எந்த வீடு? தாய் யார்? என அறிய டிரைவரிடம் காரை சிறுமியின் பின்னால் போக சொல்லுகிறார்.

சிறுமி, பல தெருக்களைக் கடந்து ஓடுகிறாள். அவளுக்கு தெரியாமல் அவளைப் பின் தொடர்கிறது கார். பல வளைவுகளை, தெருக்களை கடந்து.ஓடும் அவள் போய் நிற்கும் இடம் சமாதி. ஒரு கல்லறையின் அருகில் போய் நின்று, ரோஜாப் பூவை வைத்து. பிறந்தநாள் வாழ்த்துக்கள் அம்மா. உனக்கு மிகப் பிடித்த ரோஜாப் பூ நான் வாங்கிட்டு வந்துட்டேன் என கூறி அம்மாவின் கல்லறையில் வணங்கி முத்தமிட, பார்த்துக்கொண்டிருந்த பணக்காரரனின் கண்ணில் நீர் சுரந்தது .

சேர் , மீட்டிங்கிற்கு, நேரமாச்சு என டிரைவர் அவசரப்படுத்த, கண்ணை துடைத்த படி அவசர அவசரமாக காரில் ஏறி, கடைக்கு போய், தான் வாங்கி வைத்த பூங்கொத்தை, எடுத்துக்கொண்டு வ்ண்டியை வீட்டிற்கு போக சொன்னார். பெரிய கார் தன் வீட்டின் முன் நிற்பதை பார்த்த 92 வயதுடைய அவரின் தாய் கண்ணை சுருக்கி, யாரது? எனப் பார்க்க, அம்மா என அழைத்தபடி பூங்கொத்தை கொடுத்து , பிறந்தநாள் வாழ்த்துக்கள் அம்மா "என காலில் விழுந்த, மகனை ஆரத் தழுவிய தாய், உனக்கு இருக்கும் வேலைக்கு ஏன் அப்பா இப்ப நீ வந்தாய்? அம்மா அன்பை எப்படி வெளிப்படுத்துவது, என ஒரு சிறுமியிடம் நான் கற்றேன்.

உயிரோடு இல்லாத தன் தாய்க்கு அச் சிறுமி எப்படி பூங் கொத்தை கொடுத்து அன்பை வெளிப்படுத்தினாள். நெகிழ்ந்து விட்டேன். ஆனால் நான்?. அச் சிறுமியின் மூலமாக அன்பை, எப்படி வெளிப் படுத்துவது என அறிந்தேன் உயிரோடு இருக்கும், என் தாய்க்கு நேரில் வந்து பார்த்து வாழ்த்து பெறுவதை விட பெரும் பாக்கியம் எனக்கு ஏது? மகனை கட்டி அணைத்து முத்தமிட்டாள் அத் தாய். தாய், தந்தை இருப்பவர்கள் அவர்களுக்கு கொடுக்கும் மரியாதையை, அன்பை, வாரிவழங்க தவறாதீர்கள்.

### ஜி20 உச்சி ம

# வெற்றிகரமாக நடத்தி

## பாராட்டுக்களை தெரிவித்




(டில்லி)

**ஜி20 உச்சி மாநா பல்வேறு நாடுகள் வ வரும் நிலையில் பாராட்டுக்களைத் தெ**

இந்தியாவின் தலைநகர் டில்லியில் கடந்த 9 ஆம் திகதி மற்றும் 10 ஆம் திகதி ஆகிய இரண்டு நாட்கள் ஜி20 உச்சி மாநாடு நடை பெற்றது.

இந்த மாநாட்டில் ஒரு மித்த கருத்தோடு ஜி20 டில்லி பிரகடனம் வெளியிடப் பட்டது. இது இந்தியாவின் வெற்றியாக பார்க்கப்படு கிறது.

சீன ஜனாதிபதி ஜின்பிங், ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோரை தவிர்த்து அனை த்து தலைவர்களும் டில்லி யில் கூடியிருந்தனர்.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி இந்திய பிரதமர் மோடி 15 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்க ளுடன், இருதரப்பு பேச்சுவார்த் தையில் ஈடுபட்டார்.

இதுகுறித்து பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் "நாட்டிற்கு உலகின் டாப் 20 தலைவர்கள்

# சனாதன தர்மத்தை ஒழி
# இந்திய கூட்டணியின் நே

## மோடி கடும் விமர்சனம்

(டில்லி)

சனாதன தர்மம் ஒழிக் கப்பட வேண்டும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டா லின் பேசியது நாடு முழு வதும் சர்ச்சையை ஏற்படு த்தி இருந்தது.

இதற்கு மத்திய மந்திரி களும் பா.ஜனதா மூத்த தலைவர்களும் ஆவேச மாக கருத்துக்களை கூறி வந்தனர்.

இந்த நிலையில்தான் பிரதமர் மோடியும் முதல் முறையாக சனாதன தர்மத் துக்கு எதிராக பேசுபவர் களை கடுமையாக விமர் சித்து நேற்று கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சட்டசபை தேர்தல் நடை பெற உள்ள பா.ஜனதா ஆளும் மாநிலமான மத் திய பிரதேசத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்றுக் காலை சென்றார்.


விழாவில் பிரதமர் நரேந் திர மோடி பேசியதாவது, இந்தியா கூட்டணியினர் இந்து மதத்துக்கு எதிரான கொள்கையை கொண்ட வர்களாக உள்ளனர்.

இந்தியாவின் கலாசாரம் மற்றும் நம்பிக்கையை ஒழி க்க எதிர்க்கட்சிகள் அடங் கிய இந்தியா கூட்டணி செயற்படுகிறது.

சனாதன தர்மத்தை ஒழி ப்பதே இந்தியா கூட்டணி யின் நோக்கமாக உள்ளது. பாரதம் ஒன்றுபட்டு இருக்க சனாதன தர்மமே காரண மாகும்.

விவேகானந்தர், லோக் மான்யா திலக்கிற்கு உத் வேகம் அளித்த சனாதன த்தை இந்தியா கூட்டணி அழிக்க நினைக்கிறது. இந்தி யாவின் கலாசாரத்தை தாக்க ஒரு மறைமுக செயற்றிட்டத் துடன் எதிர்க்கட்சிகள் களம் இறங்கி உள்ளன.

இவர்கள் சனாதனத் தையே குறிவைக்கிறார்கள். சனாதனம் மீதான தாக்கு தல், நாட்டின் கலாசாரம் மீதான தாக்குதல், சனாத



னத்தை எவ்வளவு தாக்கி பேசினா லும் அது வளர்ந்து கொண்டே தான் இருக்கும். ஆண்டாண்டு காலமாக சனாதன தர்மம் இந்திய மக்களை ஒருங்கிணைத்து வரு கிறது. இந்தியா கூட்டணியின் அவதூறு கருத்துக்களுக்கு எதி ராக அனைத்து கட்சிகளும் ஒன் றிணைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சி மாநாடு; ...த்திய இந்தியாவுக்கு ...வித்த பாகிஸ்தானியர்கள்


**...மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய இந்தியாவிற்கு ...டுகள் வாழ்த்துக்கள் மற்றும் நன்றிகளைத் தெரிவித்து ...லையில் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்களும் ...ளைத் தெரிவித்துள்ளனர்.**

வருகை தரும்போது, அது அந்த நாட்டிற்கு பெருமை. இதன் மூலம் இந்திய பொருளாதாரம் இன்னும் அதிக பயனடையும்" என்றார்.

மற்றொரு நபர் "அண்டை நாடான இந்தியா தலைமை ஏற்று, ஜி20 மாநாட்டை நடத்தி யுள்ள நிலையில், நாங்கள் வெளி நாடு கொள்கையில் தோல்விய டைந்ததாக நினைக்கிறேன். பாகிஸ்தானில் கடந்த ஐந்து ஆண்டுகளாக பொருளா தாரம், பாதுகாப்பு நிலை மோசம் அடைந்துள்ளது" என்றார்.

இன்னொருவர் "இன்று நாங்கள் எங்களுடைய பொருளாதாரத்தை பாது காக்க முயற்சி செய்யும் போது, இந்தியா ஜி20 தலை வர்களை வரவழைத்து மாநாட்டை நடத்தியுள்ளது. இந்தியா சிறந்த அடியை எடுத்து வைத்துள்ளது. இந் தியர்களுக்கு இது பெருமை யளிக்கும் தருணம்" எனத் தெரிவித்தார். (நி-5)

# மெக்சிக்கோவில் நடைபெற்ற ஏலியன்ஸ் கண்காட்சி



(மெக்சிக்கோ)

மெக்சிகோ நகரில் ஏலி யன்ஸ் கண்காட்சி நடத்தப் பட்டுள்ளது. இக் கண்காட் சியை நடத்தி மெக்சிக்கோ அரசு அனைவரின் கவன த்தையும் ஈர்த்துள்ளது.

இந்தக் கண்காட்சியில் 2 ஏலியன்ஸ்களின் உடல்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

2017 ஆம் ஆண்டு, பெரு வில் இரண்டு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. "மனி தனைப் போல் அல்லாது மிகவும் சிறிய உடல், மூன்று விரல்கள், நீண்ட தலையு டன் காணப்பட்டது.

ஒன்று 700 ஆண்டுகள் பழைமையானது. இன்னொ ன்று 1,800 ஆண்டுகள் பழைமையானது.

மெக்சிக்கோவைச் சேர் ந்த ஆய்வாளரும் செய்தியா ளருமான ஜமே மொசான் அவை இரண்டுமே மனித உடல்கள் அல்ல என்று கூறியுள்ளார்.

மரபணுச் சோதனையின் மூலம் அதை நிரூபிக்க முடி யும் என்றும் "நாம் பிரபஞ்ச த்தில் தனியாக இல்லை." பூமியில் வேற்று கிரகவாசி கள் உள்ளனரா என்பதை மெக்சிக்கோ பாராளுமன்றம் விசாரிக்கிறது.

அது உறுதியானால், உல கில் அவ்வாறு உறுதிப்படுத் தும் முதல் நாடாக மெக்சி க்கோ இருக்கும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# ...ழிப்பதே ...நோக்கம்

## ...னம்



...அமைப்பு மற்றும் ஒற்றுமை யின் பலத்துடன் அவர்களின் திட்டங்களை முறியடிக்க வேண் டும்.

சனாதனத்தை பின்பற்றுபவர் கள் இந்தியா கூட்டணியிடம் எச்சரிக்கையாக இருக்க வேண் டும்.

இன்றைய இந்தியா உலகை இணைக்கும் திறனை வெளிப்படுத்தி வருகிறது. உலக நாடுகளின் நண்ப னாக இந்தியா வளர்ந்து வருகிறது.

மறுபுறம் சில கட்சிகள் நாட்டையும் சமூகத்தையும் பிளவுபடுத்த முயற்சிக்கி ன்றன.

இந்தியா கூட்டணியில் தலைவர் முடிவு செய்யப் படவில்லை. அவர்களின் தலைமைத்துவத்தில் குழ ப்பம் நிலவுகிறது.

எதிர்க்கட்சிகளின் இந் தியா கூட்டணியில் உள்ள வர்கள் தலைக்கணம் கொண்டவர்கள். ஜி20 மாநாட்டை இந்தியா வெற்றி கரமாக நடத்தியது என் பதை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். ஜி20 மாநாட்டின் வெற்றிக்கான பெருமை நாட்டு மக்க ளையே சாரும். இது 140 கோடி மக்களின் வெற்றியா கும்.

மத்திய பிரதேசத்தை முன்பு ஆட்சி செய்தவர்கள் இந்த மாநிலத்துக்காக ஒன் றும் செய்யவில்லை. ஊழல் மற்றும் குற்றங்களை தவிர அவர்கள் எதுவும் செய்ய வில்லை.

தற்போது பா.ஜனதா அரசு மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் வகை யில் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகிறது எனத் தெரிவித்தார். (நி-5)

# செயற்கைக் கோள் ஏவுதளத்தில் சந்தித்த வடகொரியா - ரஷ்யா ஜனாதிபதிகள்



(மொஸ்கோ)

உலகின் தனிமைப்படுத் தப்பட்ட தலைவர்களான வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மற்றும் ரஷ்ய ஜனா திபதி விளாடிமிர் புடின் இடை யேயான சந்திப்பு சுமார் ஐந்து மணி நேரம் நீடித்ததாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளும் மேற்கத் தேய பொருளாதாரத் தடை களை எதிர்கொள்வதால் இரு வரும் தங்கள் "நட்பிற்காக" ஒருவரையொருவர் பாராட்டி யதாக கூறப்படுகிறது.

ரஷ்யாவின் மிக முக்கிய மான செயற்கைக்கோள் ஏவு தளமான வோஸ்டோச்னி காஸ்மோட்ரோமில் இரு தலை வர்களும் சந்தித்தனர்.

பேச்சுவார்த்தையின் முடி வில், அவர்களின் உள்ளடக் கம் ஊடகங்களுக்கு வெளி யிடப்படவில்லை என்றாலும், ஜனாதிபதி புடின் அவர்கள் "அனைத்து பிரச்சினைகளை யும்" விவாதித்ததாக கூறி னார்.

கிம் மற்றும் புடின் சந்திப் பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு வடகொரியா தனது கிழ க்கு கடலில் இரண்டு குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணை களை ஏவியமை குறித்து வெளிநாட்டு ஊடகங்கள் அதிக கவனம் செலுத்தின என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 8 ஊசிகளை விழுங்கிய சிறுவன் காப்பாற்றிய மருத்துவர்கள்



(லிமா)

தென்னமெரிக்க நாடான பெருவில் 8 ஊசிகளை விழுங்கிய 2 வயதுச் சிறுவன் உயிர் தப்பியுள்ளான்.

தாயார் வேலை செய்யும் பண்ணை யில் விளையாடிய போது அவன் தோலுக்கு அடியில் மருந்தேற்றும் சிறு ஊசிகளை விழுங்கி விட்டான்.

பண்ணையில் மாடுகளுக்குத் தடுப் பூசி போட அந்த ஊசிகள் பயன்படுத்தப் பட்டதாக நம்பப்படுகிறது. சிறுவனுக்கு உடனடியாகச் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டு அவனின் வயிற்றிலும் குடலிலும் இருந்து ஊசிகள் மீட்கப்பட்டன. சிறுவன் உடல்நலம் தேறி வருவதாக மருத்து வர்கள் கூறியுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 400 |
| தக்காளி | 200 | 150 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 170 | 200 | 200 |
| கோவா | 160 | 150 | 160 | 200 |
| கரட் | 350 | 300 | 300 | 300 |
| பூசணி | 100 | 80. | 70 | 80 |
| புடோல் | 100 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 240 |
| சின்ன வெங்காயம் | 260 | 260 | 90 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 400 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 160 | 140 | 180 | 160 |
| பீற்றூட் | 180 | 160 | 160 | 160 |
| கறிமிளகாய் | 300 | 200 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 70 | 100 | 80 |
| போஞ்சி | 350 | 350 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 120 |
| தேசிக்காய் | 800 | 800 | 1000 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 450 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 280 | 250 | 280 | 400 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 100 |

# உலகின் சிறந்த சுற்றுலா நாடுகளில் இலங்கை 13 ஆவது இடத்தில்


(கொழும்பு)

சுற்றுலா இணையத்தள மான பிக் செவன் ரவல் இணையத்தளம் இலங்கையை உலகின் சிறந்த நாடுகளில் ஒன்றாகப் பெயரிட நடவடிக்கை எடுத்துள்ளது.

2023 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வாய்ப்புகளை கருத்திற் கொண்டு இந்த தரவரிசை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டில் பார்வையிட வேண்டிய உலகின் சிறந்த 50 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கை 13 ஆவது இடத்தைப் பெற்றுள்ளதுடன், ஸ்பெயின், மலேசியா, மாலைதீவு, பாலி, இந்தோனேஷியா, சீஷெல்ஸ் ஆகிய நாடுகளுக்கு மேலாக இலங்கையும் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சுற்றுலாப் பயணிகளுக்கு நட்பு ரீதியான விருந்தோம்பல் சுவையான உணவு, பானங்கள், கடற்கரையின் அழகு மற்றும் பழங்கால இடிபாடுகளை பார்வையிடும் திறனை இலங்கை வழங்குகிறது என்று அந்த இணையத்தளம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி)

# இலங்கையில் 5 சதவீதமானோருக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லை

(கொழும்பு)

இலங்கையில் மொத்த சனத்தொகையில் 5 சதவீதமானோருக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லை என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இவர்களுக்கான பிறப்புச்சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் காலங்களில் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்தவுள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் பிறப்புச் சான்றிதழ் இல்லாத 14 ஆயிரம் பேருக்கு நடமாடும் சேவை ஊடாக பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே பிறப்புச் சான்றிதழ் இல்லாதோர் எதிர்காலத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வேலைத் திட்டங்களை பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2913

வந்தினி




திரான்





விசால்




லியியன்




மிருஷாலி




யுகபாரதி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர் மற்றும் facebook முகவரியுடன் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித எச்சங்களை மறைப்பதற்காகவே புத்த கோவில்கள் அமைக்கப்படுகின்றன

## செல்வம்.எம்.பி சாடல்

(குருமன்காடு)

**மனித எச்சங்கள் காணப்படுவதை மறைப்பதற்காகவே புத்த கோவில்களை அமைத்தும் இராணுவம் நிலங்களை கையகப் படுத்தியும் வருகின்றனர் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**



வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதவுரிமை மீறல் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை என தென்னிலங்கை தலைவர்கள் கோரும் நிலையில் கொக்குத்தொடுவாயில் மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டு அதில் முன்னாள் பெண் போராளிகளது எச்சங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இதற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என தென்னிலங்கை தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும். இதற்கு அவர்கள் மௌனம் சாதிக்க முடியாது.

கோட்டாபய ஜனாதிபதியாக இருக்கும் போதும் அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் போதும் பல கொடுமைகளை எங்களது மக்களுக்கு இழைத்திருக்கின்றார். பல இன்னல்களையும் மனிதவுரிமை மீறல்களையும் அவர் செய்துள்ளார். அந்தக் குடும்பம் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அத்தனை பேரும் சர்வதேச விசாரணையில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கிடப்பிலே உள்ளன.

இப்படி ஒவ்வொரு இடத்திலும் மனித எச்சங்களை கண்டுபிடித்து கிடப்பில் போடும் நிலை தான் காணப்படுகிறது. ஆகவே இந்த விடயத்தில் சர்வதேசம் சரியான கவனத்தை எடுக்க வேண்டும்.

புத்த கோவில்கள் அமைப்பது, இராணுவம் பல இடங்களை பிடிப்பது இத்ற்கான காரணங்கள் அவர்கள் பிடிக்கின்ற இடங்களை தோண்டுகின்ற போது எங்களது மக்களின் மனித எச்சங்கள் உள்ளது. அந்த விடயத்தை மறைப்பதற்காகவே இவை துரிதமாக நடைபெறுவதாக நான் சந்தேகப்படுகின்றேன்.

ஆகவே, இந்த விடயத்தில் ஒட்டுமொத்த சிங்கள தலைவர்களும் குரல் கொடுக்க வேண்டும். சர்வதேச விசாரணையை தமிழ் மக்கள் கோருகின்றார்கள். அந்த வகையில் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கபடும் வகையில் தென்னிலங்கையில் உள்ளவர்களும் மனசாட்சிப்படி நடக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-4-250)

# இராணுவத்தின் பிடியிலிருந்த காணி நேற்று விடுவிப்பு



(முறிகண்டி)

இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு செல்லும் வீதிக்கான காணி பாடசாலை பயன்பாட்டிற்காக நேற்று கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைந்துள்ள யுத்த வெற்றி நினைவுத் தூபிக்கு பின்பகுதியில் உள்ள காணியே கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுஜீவ கெட்டியாராச்சி காணி விடுவிப்பு ஆவணத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தார். (நி-4-100-316)

# மீன்பிடிக்கச் சென்ற இருவர் கரை திரும்பவில்லை

## தலைமன்னாரில் பதற்றம்

(மன்னார்)

தலைமன்னாரிலிருந்து மீன்பிடியில் ஈடுபடுவதற்காக ஒரு படகில் சென்ற இரு மீனவர்கள் கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக தெரியவருவதாவது கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 7.30 மணியளவில் தலைமன்னார் கடற்கரையிலிருந்து இரு மீனவர்கள் மீன்பிடிக்காகச் சென்றுள்ளனர்.

ஆனால் இவர்கள் வழமையாக கரை திரும்பும் நேரத்தில் கரை திரும்பவில்லை. இதனால் அப் பகுதிசக மீனவர்கள் அவர்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை வரை மீனவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன மீனவர்களைத் தேடிச் சென்ற படகுகளில் இரு படகுகள் காற்று, கடல் கொந்தளிப்பு காரணமாக உடன் கரை திரும்ப முடியாத நிலையில் கச்சதீவில் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போன இரு மீனவர்களும் தலைமன்னாரைச் சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைக்ளின் தந்தையான டிலக்ஸ்கூஞ்ஞ, சுமித்திரன் ஆகியோர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் மஞ்சள் நிற 4391mnr என்ற இலக்கம் உடைய படகில் சென்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4-285)

# கசிப்பு உற்பத்தியை முறியடிக்கச் சென்ற பொலிஸ் அலுவலரைக் காணவில்லை

## கிளிநொச்சியில் தேடுதல் பணி தீவிரம்

(தருமபுரம்)

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டோரைக் கைது செய்யச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவரைக் காணவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் அமைந்துள்ள புது ஐயங்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று அதிகாலை 6.30 மணிக்கு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலிருந்த 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்துக்கு சென்றனர்.

அதன் போது சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் அவர்களை துரத்திச் சென்ற பொலிஸார் மீண்டும் 8.30 மணிக்கு திரும்பி உள்ளனர்.

எனினும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே அவ்விடத்தில் ஒன்று கூடினர்.

மற்றைய பொலிஸ் அலுவலரைக் காணவில்லை. இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பு அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய பொலிஸ் மற்றும் இராணுவத்தினர், மோப்ப நாய் உதவியுடன் குளத்தின் கால்வாய் மற்றும் காடு போன்ற பகுதிகளில் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4-316)

# மணல் ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

மாங்குளம் சுற்றுலா நீதிமன்றத்தில் அரசுடைமையாக்கப்பட்ட 60 கியூப் மணல் பகிரங்க ஏலவிற்பனை எதிர் வரும் ஒக்டோபர் 9 ஆம் திகதி அன்று காலை 9 மணிக்கு மாங்குளம் சுற்றுலா நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது. (நி-4)

# இரணை மடுக்குளத்தின் கீழ் இம்முறை 19160.5 ஏக்கரில் நெற்செய்கை

## கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்பாசனக்குளமான இரணைமடுக்குளத்தின் கீழ் 19160.5 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்பாசனக் குளமான இரணைமடுக்குளத்தின் இவ்வாண்டுக்குரிய பெரும் போக பயிர்செய்கை கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமாக காணப்படுகின்ற இரணை மடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு புதிதாக தயாரிக்கப்பட்ட நெற் காணி பதிவேட்டின் படி 19,160.5 ஏக்கர் நிலப் பரப்பில் 2023 / 2024 பெரும் போக நெற்செய்கை மேற் கொள்ளப்படவுள்ளது. அதாவது 36 அடி நீர் கொள்ளளவு கொண்ட குளத்தின் நீர்மட்டம் தற்போது 9அடி6 அங்குலமாக காணப்படுகின்றது. பருவ மழையை எதிர்பார்த்து மேற்கொள்ளுகின்ற வகையிலே இந்த பெரும் போகத்திற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு எடுக்கப்பட்டிருக்கின்ற தீர்மானங்களுக்கு அமைவாக விவசாயிகள் ஒத்துழைப்புகளை வழங்கி தங்களுடைய பெரும்போக பயிர்ச்செய்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (நி-4-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 283





பூங்குழலி சிந்தனையில் ஆழ்ந்தாள். சொல்ல எண்ணியதைச் சொல்லலாமா, வேண்டாமா என்று தயங்கியதைப் போல் காணப்பட்டது.

"என்னால் உனக்கு ஆகக் கூடிய பிரதி உதவி ஏதேனும் இருந்தால் சொல்! நிச்சயம் செய்கிறேன்."

"இது சத்தியமான வார்த்தைதானா?"

"சத்தியம்! சத்தியம்!"

"அப்படியானால், சமயம் வரும்போது சொல்லுகிறேன். அப்போது மறந்துவிட மாட்டாயே?"

"ஒரு நாளும் மறக்கமாட்டேன். நீ எப்போது பிரதி உதவி கேட்பாய் என்று காத்திருப்பேன்."

பூங்குழலி மீண்டும் சிறிது நேரம் சிந்தனை வயப்பட்டிருந்தாள்.

"சரி, என்னுடன் வா! இந்தக் காட்டில் ஓரிடத்துக்கு உன்னை நான் அழைத்துப் போகிறேன். அங்கே இன்று பொழுது சாயும் வரையில் நீர் இருக்க வேண்டும். பட்டினியாகத்தான் இருக்க வேண்டும்."

"அதைப் பற்றிக் கவலை இல்லை! காலையில் உன் அண்ணி பழைய சோறு போட்டாள். அவளுடைய வயிற்றெரிச்சலைக் கிளப்புவதற்காகவே அதிகமாகச் சாப்பிட்டேன். இனி இராத்திரி வரையில் சாப்பாடு தேவையில்லை."

"இராத்திரி கூடச் சாப்பாடு கிடைக்கிறதோ, என்னமோ? கையில் கொஞ்சம் எடுத்துவரப் பார்க்கிறேன். நான் சொல்லும் இடத்தில் இருட்டும் வரை நீ இருக்க வேண்டும்! இருட்டிய பிறகு நான் திரும்ப வந்து ஒரு சத்தம் செய்வேன். குயில் 'குக்கூ குக்கூ' என்று கூவுவதைக் கேட்டிருக்கிறாயா?"

"நன்றாய்க் கேட்டிருக்கிறேன். அப்படிக் கேட்டிராவிட்டாலும் உன் குரலைத் தெரிந்து கொள்வேன்."

"நான் குரல் கொடுத்ததும் நீ அவ்விடத்திலிருந்து வெளி வர வேண்டும். இருட்டி ஒரு ஜாமத்திற்குள் படகில் ஏறி நாம் புறப்பட்டுவிட வேண்டும்."

"குயிலின் குரல் எப்போது வரும் என்று காத்திருப்பேன்."

காட்டின் மத்தியில் மணல் மேடு இட்டிருந்த ஓரிடத்துக்குப் பூங்குழலி வந்தியத்தேவனை அழைத்துப் போனாள். மேட்டின் மறு பக்கத்தில் மரஞ் செடி கொடிகள் மற்ற இடத்தைவிட அதிக நெருக்கமாயிருந்தன. அவற்றை லாவகமாகக் கையினால் விலக்கிக்கொண்டு ஒரு மரத்தின் வழியாகப் பள்ளத்தில் இறங்கினாள். வந்தியத்தேவனும் அவளைப் பின்பற்றி இறங்கினான். அங்கே ஒரு பழைய மண்டபத்தின் மேல் விளிம்பு காணப்பட்டது. இன்னும் உற்றுப் பார்த்ததில் இருளடைந்த மண்டபத்தின் இரு தூண்கள் தெரிந்தன. இவை எல்லாவற்றையும் மரங்களும் செடி கொடிகளும் மறைந்திருந்தன. எந்தப் பக்கமிருந்து பார்த்தாலும் அந்த மண்டபம் அங்கே இருப்பது தெரியவே தெரியாது.

"இந்த மண்டபத்தில் ஒரு சிறுத்தை குடியிருந்தது. அது போனபிறகு நான் இதில் இருக்கிறேன். என்னுடைய சொந்தத் தனி வீடாக வைத்துக் கொண்டிருக்கிறேன். மனிதர்களைக் காணப்பிடிக்காத போது இவ்விடத்துக்கு நான் வந்துவிடுவது வழக்கம். சட்டியில் தண்ணீர் இருக்கிறது. இன்று பகலெல்லாம் இங்கேயே இரு! நாலா புறமும் மனிதர்கள் குரல் கேட்டாலும் குதிரைகள் ஓடும் சப்தம் கேட்டாலும் வேறு என்ன தடபுடல் நடந்தாலும் நீ வெளியில் தலை காட்ட வேண்டாம். மேட்டில் மேல் ஏறிப் பார்க்க வேண்டாம்!" என்று பூங்குழலி கூறினாள்.

"இருட்டிய பிறகும் இங்கேயே இருக்கச் சொல்கிறாயா? காட்டுமிருகம், புலி, சிறுத்தை ஏதாவது வந்தால்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"புலி சிறுத்தை இங்கே ஒன்றும் இப்போது இல்லை. வந்தால் நரியும், காட்டுப் பன்றியும் வரும். நரிக்கும் பன்றிக்கும் பயப்படமாட்டாயே!"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## உண்மையை உணர்த்திய அம்மா



ரித்து ரித்து என மகளை அழைத்து கொண்டே அம்மா வெளியில் வந்தார். என்ன அம்மா என்றாள் ரித்து. ஸ்கூலுக்கு எடுத்துட்டு போற சாப்பாட்டை ஏன் மிச்சம் வைக்கிற? வேற எதுவும் சாப் டியா? என்றார் அம்மா. ஓ, அதுவா சாக்லேட், கேக் வாங்கி சாப்பிட்டேன் மா என்றாள் ரித்து.

உணவுகளை வீணாக்காதே. இது கூட கிடைக்காமல் நிறைய பேர் இருக்கிறார்கள் என்றார் அம்மா. ரித்து எதையுமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சரி சரி என்று சொல்விட்டு பள்ளிக்கு கிளம்பிச் சென்றாள்.

மீண்டும் அவளது டிபன் பாக்ஸில் சாப்பாடு மீதம் வைத்து வீணாக்கி இருந்தாள். அம்மாவுக்கு கோபமாக இருந்தது. ரிதுவுக்கு எடுத்து கூற முடிவு செய்தார். ரித்து இங்க வா என்ற அம்மா. இப்படி தினமும் உணவை வீணடிக்கிறாய், இது இல்லாமல் இங்கு பலரும் இருக்கிறார்கள். ஒரு வேளை நாளை நம்ம வீட்டில் உணவு தீர்ந்து போனால் என்ன செய்வாய் என்றார். சரிம்மா, நான் கேக் சாப்பிட்டு கொள்கிறேன் என்றாள் ரித்து. அம்மா சொன்னார். சரி அது வாங்க பணம் வேண்டும் அல்லவா அதுவும் தீர்ந்து விட்டால் என்ன செய்வாய் என்றார் அம்மா. அதுதான் நம்ம வீட்டில நூடில்ஸ் இருக்குல்ல அதை செஞ்சி தாங்க என்றாள். சொல்லி விட்டு அம்மா நூடில்ஸ் பண்ணிட்டு கூப்பிடுங்க என்று ஓடி விட்டாள்.

ரித்துவிற்கு உணவின் அருமையை புரிய வைக்க அம்மா முடிவு செய்தார். டிபன் பாக்ஸில் உணவின் அளவை குறைத்தார். ரித்து வீட்டுக்கு வந்ததும் அம்மா சாப்பாடு போதவில்லை. நல்ல வேல கேக் சாப்பிட்டேன் என்றாள். இந்த முறை பாக்கெட் மணி கொடுக்காமல் உணவையும் குறைந்த அளவே வைத்து விட்டார் அம்மா. ரித்து வீட்டுக்கு வந்ததும் அம்மா எனக்கு பசிக்குது. அம்மா சொன்னார் உணவு காலியாகி விட்டது. இனிமேல் இவ்வளவுதான் என்றார் அம்மா.

மறுநாள் ரித்து ஸ்கூலில் சாப்பிட்ட உணவு சுத்தமாக அவளுக்கு பத்தவில்லை. சரியான பசியில் வீட்டிற்கு வந்தாள். அம்மா எனக்கு நூடில்ஸ் பண்ணி தாங்க ரொம்ப பசிக்குது என்றாள். அம்மா சொன்னார் நூர்டில்ஸ் தீர்ந்து விட்டது. ஆனால் அம்மா எனக்கு பசிக்குதே. நீ உணவை வீணடிக்காமல் இருந்தால் உனக்கு போதுமான அளவுக்கு இப்பொது கையில் பணம் இருந்திருக்கும் அல்லவா என்றார். வீட்டிலும் உணவு இருந்திருக்கும். இனி மேலாவது உணவை வீணடிக்காதே.

ஒருநாள் அது கிடைக்காமல் கூட போகலாம் என்றார் அம்மா. ரித்து அம்மாவிடம் மன்னிப்பு கேட்டாள். அதன் பிறகு அவள் எப்போதுமே உணவை வீணடிக்கவில்லை.

கொடுக்கும் பாக்கெட் மணியையும் சேர்த்து வைத்தாள். எனவே குட்டீஸ் உணவு என் பது விலை மதிப்பற்றது. நம்மில் பலருக்கும் அது ஒருவேளை மட்டுமே கிடைக்கும் பொருளாக இருக்கலாம். முடிந்த வரை உணவை வீண டிக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகமே ! அழகிய திருவுருவமே ! உன் அன்பான பார்வையிலே உலகமே அடங்குமே !

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நல்லூர் முருகனைக் கண்டிட அவனை வணங்கும் அற்புதம் காண்மினே!

நல்லூர்க் கந்தனின் தீர்த்தோற்சவத்தின் மாலைத் திருவிழாவுக்குச் சென்றேன்.

வேற்பெருமான் தூய வெண்ணிற ஆடை அணிந்து வள்ளி, தெய்வானை சமேதரராய்க் காட்சி தந்தார்.

வழமைபோல் அடியார்கூட்டம் அலைமோதியது. வேற்பெருமானை பார்த்தவண்ணம் அடியார் கூட்டம் முருகனோடு வீதி வலம் வந்தது.

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்று மணிவாசகர் அருளிய திருவாசகத்தை நினைந்தேன்.

இமைப்பொழுதும் நல்லூர் முருகனைப் பார்க்கத் தவறாத பக்தர்களைக் கண்டேன்.

எத்தனை இலட்சம் கண்கள். அத்தனையும் நல்லூர் வேற்பெருமானைப் பார்க்கின்ற அற்புதம். எங்கும் காண முடியாத அதிசயம்.

காலையில் தீர்த்தவாரி. மதியம் கடந்தும் பாற்காவடி, பறவைக் காவடி என நேர்த்தி தீர்க்கும் அடியவர்கள் நல்லூர்க் கந்தனை நாடி வந்த காட்சி நெஞ்சத்தை நெகிழ வைக்கும்.

ஆம், நல்லூர் கந்தசுவாமியார் மீது எத்தனை பக்தி வைராக்கியம்.

என்னதான் அங்கு இருக்கிறது என்று ஒரு கணம் சிந்தித்தேன்.

சிந்தனைக்கும் அவன் விடுவதாக இல்லை. அள்ளி இழுக்கின்ற அவனின் ஞான ஒளியில் துவண்டு ஐயனே! ஆட்கொண்டருள் என்று இரப்பதைத் தவிர, இரந்து அழுவதைத் தவிர அவனிடம் கேட்பதற்கு வேறு எதுவும் இல்லை.

அது வேண்டும். இது வேண்டும் என்று நல்லூர் முருகனிடம் இரந்து வேண்டுதற் பொருட்டு அவனிடம் சென்றால், அவனோ அவ்றையெல்லாம் மறக்க வைத்து, தன்னைப் பார்க்க வைக்கிறான்.

உண்மை. சுற்றி வருகின்ற வேலைப் பார்த்தாலே எதுவும் வேண்டாம் என்றாகிறது.

முருகா! உன்னை உன்னருகில் நின்று பார்க்க வை. அதுபோதும் என்ற பற்றற்ற பரமநிலை பற்றிக்கொள்கிறது.

நல்லூர் முருகனைப் பார்த்து வேற்பெருமானே! என்று கண்ணீர் விட்டு அழுகின்ற அடியவர்களிடம் என்ன குறையென்று கேட்டால்,

நல்லூர் முருகனைக் காணாத நாள் உண்டல்லோ அதுதான் குறை. அந்தக் குறைகளைய வேண்டும் என்று வேலனைக் கேட்டபோது கண்கள் கசிந்தன என்பர் அவன் அடியார்.

அத்துணை ஈர்ப்பு அவனிடம் இருப்பதனாலன்றோ கிடந்தும் தவழ்ந்தும் நடந்தும் நல்லூர்க் கந்தனின் திருமுகத்தைக் கண்டிட இலட்சோப இலட்சம் மக்கள் வந்து சேர்கின்றனர் அங்கு.

ஆம், நல்லூர் முருகன் முத்தி தரும் வேலன். ஆகையால் அவனிடம் வருவோர் அவனைக் காண வரம் வேண்டுவர். இதுவே அவனின் அற்புதம்.

# 6 ஆயிரத்துக்கும் அதிகமான இந்திய சுற்றுலாப் பயணிகள்

## கடந்த 3 மாதத்தில் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

கொர்டேலியா குரூஸ் கப்பல் சேவையை ஆரம்பித்து 3 மாத காலப்பகுதிக்குள் காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக இந்தியாவில் இருந்து 6000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர் என இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜூன் மாதம் 16ம் திகதி அன்று அதன் முதல் வருகையிலிருந்து, அடுத்தடுத்த 9 பயணங்களின் போது,சுற்றுலாப்பயணிகள்யாழ்ப்பாண நகரத்தில் ஒரு மறக்க முடியாத விடுமுறை அனுபவத்தைத் பெற்றுள்ளனர்.

அதன்வளமான வரலாறுடன், யாழ்ப்பாணம் தென்னிந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளும் கலாசார பிணைப்புகளையும் அனுபவித்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்கரைகள் மற்றும் கோவில்களின் அற்புதமான அனுபவத்தை சுற்றுலாப் பயணிகள் பெற்றுள்ளார்கள்.

வடமாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் மாவட்ட செயலகத்தின் உதவியுடன் தெல்லிப்பழை பிரதேச செயலகமும் வலி வடக்கு பிரதேச சபையும் ஏற்பாடுகளை செய்திருந்ததுடன் வடமாகாண ஆளுநர் முயற்சிகளை ஒருங்கிணைத்தார்.

இந்த மேம்படுத்தப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை இப்பகுதியில் உள்ள உள்ளூர் சமூகத்திற்கு உதவியுள்ளதுடன் தொழில் முனைவோருக்கு புதிய வழிகளை ஏற்படுத்தியுள்ளது என்று இந்திய துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# ஜனாதிபதி பொது மன்னிப்பு 40 கைதிகள் விடுதலை

(மட்டக்களப்பு)

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 40 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து ஒரு பெண் கைதி உட்பட 40 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சிறு குற்றம் புரிந்த தண்டப்பணம் செலுத்தாத கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரனின் ஆலோசனைக்கு அமைவாக இடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில் பிரதம சிறைச்சாலை அதிகாரி ஏ.பீ.பானுக தயந்த தசில்வா உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கிளிநொச்சியில் இளைஞர்கள் மீது வன்முறைக் கும்பல் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஊற்றுப்புலம் கிராமத்தில் அமைந்துள்ள ஆதி விநாயகர் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு அலங்கார பணிகளில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் மீது அதே கிராமத்தைச் சேர்ந்த ரவுடிக்கும்பல் ஒன்று தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த நான்கு இளைஞர்கள் உடனடியாக அவசர நோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த காடையர் குழுவினர் தொடர்ச்சியாக பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்ற குழுவினர் என்றும்,

கடந்த காலங்களில் பல தடவைகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கும் பொது மக்கள் இந்தக் குழுவினரால் கிராமத்தில் நிம்மதியற்ற நிலைமை உருவாகியுள்ளது என்றும் கவலை தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரால் எவ்வித நடவடிக்கைகளும் இது வரை இவர்கள் மீது மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் குழுவினர் மீது பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்தில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# யாழில் இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

## 9 மாதங்களின் பின் சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் 09 மாதங்களுக்கு பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மயிலங்காடு பகுதியில், கடந்த ஜனவரி மாதம் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக இளைஞன் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மது போதையில் மனைவியைத் தாக்கி

# பெற்றோலினை ஊற்றி தீ மூட்டிய கணவன்

(கொழும்பு)

கணவனால் தாக்கப்பட்டு தீமூட்டப்பட்ட மனைவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வீரம்புகெதர பொலிஸார் தெரிவித்தனர்.

ரஞ்சனகம பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி, குறித்த பெண்ணின் கணவர் மதுபோதையில் வீட்டுக்கு வந்துள்ளார்.

இதன்போது, இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட,அது மோதலாக மாறியுள்ளது.

இந்நிலையில், கோபமடைந்த கணவர் தனது மனைவியை தாக்கியுள்ளதுடன், பெற்றோல் ஊற்றி தீ மூட்டியுள்ளார்.

இதனால் பலத்த காயமடைந்த பெண் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** கோம்பயன் மணல், நாவாந்துறை நாவலர் வீதி, பொம்மைவெளி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, சிவபுரம், கிராஞ்சி நீர்ப்பாசன சபை, பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குருக்களூர்-மன்னார் வீதி, நீலியமோட்டை, பறயனாளங்குளம் குருக்களூர், பெரியதம்பனை, புளியடி முறிப்பு, வலைத்தோட்டம், பெரியதம்பனை, மகறம்பைக்குளம், மலையாபுருத்திக்குளம் சமணங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## அகில இலங்கை கம்பன் கழகத்தின்

# அறநெறிப் பாடசாலை திறப்பு விழா நாளை

(கிளிநொச்சி)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் அறநெறிப் பாடசாலை மற்றும் முன்பள்ளி கட்டடத்திறப்பு விழா நாளை சனிக்கிழமை கிளிநொச்சி ஜெயந்தி நகரில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே சிவஞானம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

32

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இந்தக் கட்டத்தில், சில வகையான கடன்கள் மறுசீரமைப்பிலுருந்து விலக்கப்பட வேண்டும் என்ற கடனாளி நாடு வாதிட்டால் அந்த வாதத்தை கணிசமான சந்தேகத்துடன் நீங்கள் ஆராய வேண்டும். இதற்கு சிறந்த உதாரணம், "உள்ளூர் கடன்வழங்குனர்களின் கடன்களை மறுசீரமைக்க நாம் விரும்பவில்லை" என்று கடனாளி நாடு வெளிநாட்டு கடன் வழங்குநர்களுக்கு சொல்லும்.

அதற்கு காரணம், முதலாவது, உள்ளூர் கடன் வழங்குநர்கள் வாக்களிப்பவர்களாக இருப்பார்கள். இரண்டாவது, இந்த கடன் வழங்குபவர்கள் பல உள்ளூர் நிதி நிறுவனங்களாக இருப்பார்கள்.

"இந்த கடன்களை மறுசீரமைக்க எங்களை கட்டாயப்படுத்தினால் எமது உள்ளூர் வங்கிப் பொறிமுறையின் தலையை நாங்கள் இழக்க வேண்டி வரும். இந்த கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை ஊடாக நாம் சேமிக்கும் ஒவ்வொரு டொலரும் அந்த வங்கிப் பொறிமுறையை மீளக் கட்டமைப்பதில் செலவழிக்க வேண்டி வரும்." இவ்வாறான வாதங்களை கடனாளி நாடு முன்வைக்கும்.

நீங்கள் ஒரு நாட்டுக்கு கடனளித்தவராக இருந்தால், அந்த நாடு ஒரு கடன் மறுசீரமைப்புக்கு போகுமாக இருந்தால், அந்தக் கடன் மறுசீரமைப்புக்கு கீழ் நீங்கள் அளித்த கடன் உள்ளடக்கப்படாமல் இருப்பதற்கு உரிய எல்லா முயற்சிகளையும் நீங்கள் எடுக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் கொடுத்த கடனின் அசலையும் வட்டியையும் முழுவதுமாக திருப்பி எடுப்பதுதான் உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்.

அப்படிச் செய்ய முடியாத பட்சத்தில் உங்கள் கடன் மறுசீரமைப்புக்கு உட்படும் என்று தெரிந்தால், மற்ற எல்லா கடனளித்தவர்களின் கடன்களும் மறுசீரமைத்தலுக்கு உள்ளாக வேண்டும் என்று நீங்கள் வாதிட வேண்டும்.

கொதிக்கும் எண்ணெய்ச் சட்டிக்குள் நீங்கள் இருக்கும் போது, மற்றவர்களை அதிலிருந்து வெளியேற்றும் எந்தவொரு திட்டத்தையும் நீங்கள் பரிசோதித்து கேள்வி கேட்க விரும்புவீர்கள். இதற்கு சிறந்த உதாரணம், 2005 ஆம் ஆண்டு ஈராக்கில் நான் (லீ புக்ஹைட்) சந்தித்தது. அமெரிக்க 4ஆவது காலாட்படை பிரிவின் "வேண்டுகோளின்" பேரில் சதாம் உசேன் அரச பதவியில் இருந்து வெளியேறி இருந்தார். வெளியேற முதல் அவர் செய்து வைத்திருந்த மோசமான செயற்பாடுகளில் ஒன்று 140 பில்லியன் டொலர் கடனை வாங்கி வைத்திருந்தது. இந்தக் கடன்கள் ஜப்பானிய வங்கிகள் தொடக்கம் கொரிய கட்டுமான நிறுவனங்கள் வரை அனைத்து வகையானவர்களிடமிருந்தும் வாங்கப்பட்டிருந்தன.

இந்த கடன்களை வழங்கியவர்களின் பல்வகைத்தன்மை வியக்க வைக்கும் வகையில் இருந்தது. அங்கு கடன் மறுசீரமைப்பு தொடங்கியபோது, அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு ஏன் அதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என பல்வேறு வாதங்களை முன்வைத்தார்கள். "கடன் மறுசீரமைப்பு முடிந்த பின் மீண்டும் ஈராக் கடன் வாங்க வேண்டும். அப்பொழுது தாங்கள் அந்தக் கடனை வழங்க தயாராக இருப்போம்." என்று வங்கிகள் வாதிட்டன.

இந்தச் செயல்பாட்டில் ஒரு கடனாளி நாடு ஒரு குறிப்பிட்ட கடனளித்தோர் குழுவுக்கு கடன் மறுசீரமைப்பிலிருந்து விலக்கு அளிக்க இணங்குவது கடனாளி நாட்டுக்கு மிகவும் ஆபத்தானது என்று நான் (லீ புக்ஹைட்) கூறுவேன். ஒரு பொதுவான ஒருமித்த கருத்து இல்லாவிட்டால், எந்தவொரு குறிப்பிட்ட கடனளித்தோர் குழுவிற்கும் விலக்கு அளிக்கப்படக் கூடாது.

ஆனாலும், பன்னாட்டு நிதி நிறுவனங்கள், வர்த்தக கடன் வழங்குனர்கள், விற்பனையாளருக்கு விலக்கு அளிக்கப்படுவது பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படும். அடமானக் கடன்களுக்கு விலக்கு அளிக்கப்படுவதும் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஏனெனில், அந்தக் கடன் ஒரு சொத்தை அடமானமாக வைத்து வாங்கப்பட்டது. அந்தக் கடன் திருப்பச் செலுத்தப்படாவிட்டால் அந்த சொத்தை கடனாளி நாடு இழக்க நேரிடும். உதாரணமாக, ஒரு விமானத்தை கடனுக்கு வாங்கினால், அந்தக் கடனை செலுத்தாவிட்டால் விமானத்தை இழக்க நேரிடும்.

உலக வங்கியின் முதலீட்டு தகராறுகளைத் தீர்ப்பதற்கான சர்வதேச மையத்தின் (International Center for the Settlement of Investment Disputes,ICSID) முன் நாற்பது வழக்குகள் இது தொடர்பாக வந்தன. நடுவர் மன்ற தீர்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவை வெனிசூலா குடியரசுக்கு எதிரான நட்ட ஈட்டு தீர்ப்புகள். கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில், கடனளித்தவர்களிடம் நிவாரணத்தை கோரும் போது, மிகுதியாக இருக்கும் கடன் தொடர்பாக கடனாளி நாடு என்ன செய்யப் போகிறது என்பதற்கான பதில் இல்லாமல் கடனளித்தவர்களால் அந்த நிவாரணக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கும்.

நடுவர் மன்ற தீர்ப்புகளும் ஒரு வகை கடனே. அந்த வகையில் கடன் மறுசீரமைப்பிலிருந்து நடுவர் மன்ற தீர்ப்பு வைத்திருப்பவர்களை விலக்கவோ அல்லது அவர்களுக்கு தனியாக பணம் செலுத்தவோ ஏனைய கடனளித்தவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். ஏனெனில், கடனளித்தவர்கள் தாம் வழங்கும் கடன் நிவாரணத்தை கடனாளி நாடு ஒரு குறித்த சிறு குழுவினரை திருப்திப்படுத்துவதற்காக பயன்படுத்துவதாக கருதுவார்கள். இதுதான் இங்கு நடக்கும் பேச்சுவார்த்தைகளின் இயங்கியல்.

### பிணைமுறிக் கடன் மறுசீரமைப்பு

பிணைமுறிக் கடன் மறுசீரமைப்பு உண்மையில் மிகவும் எளிமையானது. உண்மையில் அதில் இருப்பவை மூன்று கருவிகள் மட்டுமே. நாம் கடனின் அசலை குறைக்க முடியும். இதனை முடி வெட்டுதல் (hair cut) என்று சொல்வார்கள். இரண்டாவது வட்டி விகிதத்தைக் குறைக்கலாம். மூன்றாவது கடனின் முதிர்ச்சிக் காலத்தை நீட்டிக்கலாம். அல்லது அந்த மூன்றில் விரும்பியவற்றை எடுத்து கலந்து பொருத்தலாம். பிணைமுறிக் கடன்களின் மறுசீரமைப்பில் செய்யக்கூடியது இவ்வளவுதான். ஒரு அரசாங்கத்துக்கு கடன் கொடுத்த உள்ளூர் நிதி நிறுவனங்களைத் தவிர, கடன் கொடுத்த வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் நிலைப்பாட்டையும் நாம் பார்க்க வேண்டும். இதனை நாம் ஐரோப்பாவில் நடந்த கடன் நெருக்கடி காலகட்டத்தில் அறிந்து கொண்டோம். அங்கு பிணைமுறிக் கடன்களை மறுசீரமைக்க வேண்டாம் அல்லது மிகவும் மென்மையான முறையில் மறுசீரமைக்க வேண்டும் என்று இந்த நிதி நிறுவனங்கள் தங்கள் சொந்த அரசாங்கங்களை நச்சரித்தன. ஐரோப்பிய அரசாங்கங்கள் அதனை ஏற்றுக் கொண்டன. அவை ஏன் இந்த எதிர்மறையான கொள்கையை ஏற்றுக் கொண்டன என்பது ஒரு கேள்விக்குறி.

2012 இல் கிரேக்கத்தின் பிணை முறிக்கடனை மறுசீரமைப்பதற்கு முன்னராக ஐரோப்பிய அரசாங்கங்கள் கடன் நெருக்கடிக்குள் இருந்த நாடுகளின் கடன்களைமறுசீரமைகவில்லை.

ஐரோப்பிய அரசாங்கங்கள் கடன் நெருக்கடிக்குள் இருந்த நாடுகளுக்கு பண உதவி வழங்கி நெருக்கடியிலிருந்து தூக்கி விட்டன. அவை ஏன் அவ்வாறு செய்தன? ஒரு காரணம் என்னவென்றால், இந்தக் கடனாளி நாடுகளின் பெருமளவான கடன் பத்திரங்களை வடக்கு ஐரோப்பிய வங்கிகள் வைத்திருந்தன. கடனாளி நாடுகள் அசலைத் திருப்பிக் கட்டாவிட்டால் அந்த வங்கிகள் தோல்வியடையும் என்பதை வங்கிகள் தமது சொந்த அரசாங்கங்களுக்கு தெரிவித்தனர். அந்த வங்கிகள் தோல்வியடைந்து அவற்றை மீளக் கட்டமைப்பதிலும் விட அந்த வங்கியிடம் கடன்பட்ட நாடுகளுக்கு உதவி செய்து அவற்றினூடாக வங்கிக்கு சேரவேண்டிய காசைப் பெற்றுக் கொள்வது அந்த அரசாங்கங்களுக்கு அரசியல் ரீதியாக அனுகூலமாக இருந்தது. இப்பொழுது IMF செயற்பாட்டுக்கு வருவோம். ஒரு கடனாளி நாடு தனது கடன்களை மறுசீரமைப்பதில் ஆதிக்கம் செலுத்தும் காரணிகளைப் பற்றி பேசுவோம்.

எனது (லீ புக்ஹைட்) பார்வையில் IMF என்பது ஒரு சுவாரசியமான நிறுவனம். அது ஒரு நாட்டின் கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் உள்ள விகிதம் (Debt to GDP ratio) பற்றி அதிக கவனம் செலுத்தும். உண்மையாக சொல்லப் போனால்ஒரு நாட்டின் கடன் வாங்குவதற்கான இயலுமையை மதிப்பிடுவதற்கு இந்த விகிதம் ஒரு மோசமான சுட்டிஆகும் ஏனெனில் அது ஒரு டொலரின் நாளைய மதிப்பையும் 40 வருடங்களுக்கு பின் அதன் மதிப்பையும் ஒன்றாகவே எடை போடுகிறது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின்...

தற்போதைய அரசாங்கத்தின் அடக்குமுறை வரிக் கொள்கை மற்றும் ஜனநாயக விரோத ஆட்சிக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

"அரச பல்கலைக்கழகங்களை பாதுகாக்கவும் வெளிச்செல்லும் மூளைவளத்தை நிறுத்தவும்" எனும் தொனிப் பொருளில் நாடளாவிய ரீதியில் சகல அரச பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் (FUTA) அழைப்பில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போராட்டத்தில் பங்கேற்றதுடன் வரிக் கொள்கைக்கு எதிராகவும் மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பான பதாகைகளையும் தாங்கியிருந்தனர். (ம-7,33)


மெகா பவர்
திகதி 14/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1585
V 20 02 22 45 73
75184

தன நிதானய
திகதி - 2023.09.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1267
P 32 73 75 76 P
11660

Lucky 7
திகதி 14.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0063
L7 இலக்கம் 3 0
வெற்றி இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 7 8 8 0 3 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3479
சீட்டிழுப்பு திகதி 14.09.2023
C 09 43 46 72
C 01510

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.14
சீட்டிழுப்பு இலக்கம் 546
விருச்சிகம் 04 44 56 57 விருச்சிகம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/14
சீட்டிழுப்பு இலக்கம் 5237
B 9 6 1 0 6 0


## 65,871...

பதிவாகியுள்ள பயிர் சேதம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் படி இந்த மாதம் 12ஆம் திகதி வரை 67 ஆயிரத்து 122 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 65 ஆயிரத்து 411 ஏக்கர் நெற்செய்கை நிலங்கள் மற்றும் 465 ஏக்கர் ஏனைய பயிர்கள் சேதமடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## கொக்குத்தொடு...

உடல் எச்சங்கள் 4 பெண் போராளிகளுடையது எனவும் 1 ஆண் போராளியுடையது எனவும் சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தார்.

இன்று 9ஆவது நாள் அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்து அகழ்வுப் பணிகளை பார்வையிட்டனர். (ம-7,299)

## ஐ.எம்.எப்...

கூட்டம் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மற்றும் நிதியமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மீளாய்வு செயற்பாடுகளுக்கு அமைய இறுதிக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தற்போது வெளிநாட்டு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாடு திரும்பியதும் அன்றைய தினம் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## அரசு தேர்தலை...

பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான புதிய பிரித்தானிய உயர்ஸ்தானிகராகப் பதவியேற்றதன் பின்னர் இடம்பெற்ற இந்த விசேட சந்திப்பில், நாட்டில் நிலவும் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் இருதரப்பினர் இடையே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

தற்போதைய அரசாங்கம் குடிமக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தல்களை குறித்த நேரத்தில் நடத்தாமை மற்றும் தேர்தல்கள் தொடர்ந்தும் பிற்போடப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் பிரித்தானிய புதிய உயர்ஸ்தானிகருக்கு தெரியப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் டேனியல் ஷெரியும் கலந்து கொண்டிருந்தார். (ம-7)

## காளை மாடு...

குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காளை மாட்டுக்கு உணவு வைக்க சென்ற வேளை காளை மாடு முட்டி காயமுற்றவர் வீழ்ந்து கிடந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## தியாக தீபத்தின்...

9.45 மணியளவில் கிழக்கு மாகாணத்தின் பொத்துவிலிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

குறித்த ஊர்திப் பவனியானது எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் நிறைவடையும்.

எனவே, தங்களுடைய பிரதேசங்களால் ஊர்திப் பவனி வருகின்றபோது மக்கள் ஒவ்வொருவரும் மலர் தூவி வணக்கம் செலுத்துமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-7)

## 20 ஆயிரத்துக்கு...

களாக லிபியாவில் பலத்த மழை பெய்தது. கனமழையால் கிழக்கு லிபியாவில் டெர்னா நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, அதன் இரண்டு அணைகள் உடைப்பெடுத்தன.

இதன் காரணமாக டெர்னா, பாய்தா, சூசா, ஷஹத், மார்ஜ் உள்ளிட்ட பல வேறு நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

மலையின் அடிவாரத்தில் அமைந்திருந்த டொனா நகருக்குள் வெள்ளம் வெகு சீற்றத்துடன் பாய்ந்து, அங்கிருந்த வீடுகளை உடைத்து அவற்றின் இடிபாடுகளையும், அங்கிருந்த வாகனங்கள் உள்ளிட்ட பிற பொருட்களையும் அருகிலுள்ள கடலுக்குள் அடித்துச் சென்றது.

அதேபோல், பலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்பதால், அவர்களை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

பலர் உறக்கத்தில் இருந்த போது சுனாமி போன்ற ஒரு பெரிய வெள்ளம் கடலை நோக்கி மக்களை அடித்துச் சென்றிருக்கிறது.

இதனால், கடலுக்குள் இருந்து உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன. (ம-7)

## நாட்டை...

ஆனால் சர்வதேச மட்டத்தில் நாட்டை ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டோம். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படம் தற்போது பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

பொது பல சேனா அமைப்பின் செயற்பாடுகளினால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் நிலையில் சிங்கள அரச தலைவரை ஆட்சிக்கு கொண்டு வர குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக சனல் 4 குறிப்பிடுகிறது.

புலனாய்வு பிரிவின் பிரதானி சுரேஷ் சலே ஜனாதிபதி தேர்தல் காலத்தில் முஸ்லிம் அடிப்படைவாதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. சஹ்ரான் உட்பட அடிப்படைவாதிகளுடன் சலே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக குறிப்பிடப்படும் காலத்தில்தான் நாட்டில் இருக்கவில்லை என சுரேஷ் சலே குறிப்பிடுகிறார். ஆகவே சனல் 4 வெளியிட்டுள்ள ஆவணப்படத்துக் கும், சுரேஷ் சலே குறிப்பிடும் விடயம் தொடர்பில் வெளிப்படையான விசாரணைகளை முதலில் முன்னெடுக்க வேண்டும் என்றார். (ம-7)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2211 | வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.09.14 | தினம் வியாழக்கிழமை
13 15 45 59 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,692,172.40
53556 | 131

சனிதா
திகதி 2023.09.14 | வெற்றி வாரம் 4372 | வர்ணம் சிவப்பு
14 46 51 56 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,428,108.00
44609 | 811
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3923 | வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.14 | தினம் வியாழக்கிழமை
13 27 48 61 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,602,520/-
42040 | 138

திகதி 14.09.2023 | வெற்றி வாரம் 1387
X 21 04 17 42 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 439,834,394.20
13986 | 304
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 628 | திகதி 2023-09-14 | வர்ணம் நீலம்
Z 44 55 59 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,261,136.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2037
சீட்டிழுப்பு திகதி: 2023.09.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,401,488/-
04 26 51 55 W
68530 | 386


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 வருட வெற்றிகரமான சேவையில். JAN/2023

**UK மற்றும் கனடாவில்**
# உயர்கல்வி

**குறைந்த கட்டணத்தில்**
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது விசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

நேர்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

**WEC COLLEGE**
076 715 6502 / 021 720 0989

## வேலை வாய்ப்பு

வவுனியாவில் இயங்கும் **Courier**
சேவை நிறுவனம் ஒன்றிற்கு
**Branch Executive**
தேவை.
வயது: 18-35 வரை
(17081)
நேர்முகப்பரீட்சை : 16/09/2023
வவுனியாவில் இடம்பெறும்.

**076 690 8967**

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7229)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
**DBF & HDBF (16/09/2023)**
(**IBSL** நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Business Level I,II (16/09/2023)

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
(AA1 - 16.09.2023) G.C.E O/L பெறுபேற்றினை
எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
**(AA2, AA3 -16/09/2023)**
(C-7230)

**Certificate Course in English**

**Further Details :** Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917

## விசா விண்ணப்பம்

**கனடா | பிரான்ஸ் | லண்டன்**

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா,பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

**ருமேனியா,கனடா வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத் தரப்படும்**
விசா சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று (16 / 09/ 2023)
சனிக்கிழமை 10.30 – 4.30 மணிவரை நடைபெறும்

**நடைபெறும் இடம் : Loyalas Wedding hall**
**No.10, ST.Patrick Road** (சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக)

குறிப்பிட்ட விசா மாத்திரம் கைவிருப்பில் உள்ளது.
முற்பதிவுகள் அவசியம். முற்பதிவுகள் இல்லாதவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.
முற்பதிவுகளுக்கு

**NSA Group of Company (Pvt) Ltd.**
**197,Main Street, Jaffna.**
(நீபந்தனைக்குட்பட்டது) (17061)

**077 266 6429, 021 221 0599**
**077 877 4838**

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **நடராஜா**
**பத்மநாதன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.04.1931 | 30.08.2011 |

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே!
கண்மூடி முழிக்குமுன்னே எம்மை
கடந்து விட்டீர்கள்
என்றென்றும் எங்களுடன்
இணைந்திருப்பீர்கள் - அப்பா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.103/1,
கோவில் வீதி,
நல்லூர். (C-7261)

உங்கள் நினைவுடன்...
மகள்

# 6 ஆம் மாத நீங்காத நினைவலைகள்



முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட செயலாளர் நாயகமும் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும் சமாதான நீதவானும் திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும் முன்னாள் வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமாகிய

அமரர் உயர்திரு. **பொன்னுத்துரை**
**மதிமுகராஜா**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24.01.1948 | 26.12.1998 |

அமரர் திருமதி **பொன் மதிமுகராஜா**
**விஜயலட்சுமி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.12.1948 | 15.03.2023 |

அம்மா அம்மா என்று கதறுகின்றேன்
உங்கள் செவிதனில் கேட்கவில்லையா!
ஒரு கூண்டில் வாழ்ந்த எம்மை விட்டு
எங்குதான் சென்றீர்கள் அம்மா!
பெரியவன் என்னும் உங்கள் குரல்
கேட்க தவமிருக்கின்றேன் அம்மா!
என்னுடைய தொலைபேசி உங்கள்
குரலுக்காய் காத்துக்கிடக்கின்றது அம்மா!
உங்கள் பேரர்களோ உங்களை காணாது
தவிக்கின்றார்கள் அம்மா!

(17077)

“ஸ்ரீமுருகபவனம்”
தாவடி வடக்கு, கொக்குவில்.

காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06. 077 775 0312

தகவல்: பொன்.மதிமுகராஜா
விஜயகாந்த் 077 620 2077

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org